1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : ஆம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த விடுதியைத் தொடங்க சுமார் ஓராண்டு காலந் தாழ்த்தப்பட்டு இருக்கிறது, அது ஒரு ஜமீன் ஆதிக்கத்தில் இருந்ததால், விரைவாக அந்த இடத்தில் விடுதியைத் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவர்வர்களே, முன் கேள்விக்கு பதில் அளித்தபோதே சொன்னேன். இந்த விடுதியை இரண்டாவது பகுதி திட்டமாக சேர்க்க வேண்டுமென்று நம்முடைய இயக்குநர் அவர்கள் பரிந்துரை செய்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் 25—10—1975-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப் பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. 1975-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/75).

2. தமிழ்நாடு 1975-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/75).

3. தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (மேல்வரி), திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/75).

மேலும், கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், 25—10—1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டு, திருத்தம் ஏதுமின்றி, ஒப்புதலளித்து நிறைவேற்றப் பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கடன் பெற்றோர் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/75).

2. தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு (திருத்த-செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/75).

3. 1975-ம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/75).

3. நடைமுறைக் கேள்வி.

இராமபிரசாத் ராவ் ஆணைக் குழுவின் அறிக்கையை சட்டப் பேரவைக்கு அளிக்குமுன் பத்திரிகைகளுக்கு தெரிவிக்கப் பட்டது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்றால், 242-பிரிவின்படி, இந்த சட்டமன்ற விதிகளிலே எதுவுமே குறிப்பிடப் படாமல் இருந்தால், அதைத் தாங்களே நடைமுறைக்குக் கொண்டு வரலாம் என்று இருக்கிறது. பல ரிப்போர்ட்டுகள் எல்லாம் இங்கே சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்குப் பல விதிகள் இருக்கின்றன இதே மன்றத்தில் திரு. இராம பிரசாத் ராவ் அவர்களைக்கொண்டு ஒரு கமிஷன் நியமித்தோம்.